1982 பிப்ரவரி 18]

Hon. Dr. H.V. HANDE: Hon. Speaker Sir only recently we had a meeting with the Leprosy patients in the City of Madras. They are a well organised sector. During the course of our discussion the main problem they posed before us was that the moment they are transferred to Hospitals no one takes care of them.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது தமிழ்நாடா, அல்லது இந்தியாவின் வேறு ஏதாவது ஒரு மாநிலமா? இங்கே ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருக்கிறார்கள், எங்களுக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஆங்கிலம் தெரியும். இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, கேள்வி ஆங்கிலத்தில் இருந்ததால் அவர்களுக்காக ஆங்கிலத்தில் பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று ஆங்கிலத்திலேதான் சொன்னார்கள் (சிரிப்பு). அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று தமிழிலே சொல்லியிருக்க வேண்டும்.

நான் சொல்ல வந்ததெல்லாம், இப்படி இருக்கிற குழந்தைகளை என்ன செய்வது என்ற பிரச்சனை எழுந்தது. 'ட்ரான்சிட் கேம்ப்' என்று ஏற்படுத்தி, இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களை, நாம வற்புறுத்தாமல் அவர்கள் விருப்பப்படியே அங்கே வரச்செய்து, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். குழந்தைகளுக்கு கூட மாற்றுத் திட்டங்களை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் பரிசீலனை செய்கிறோம். இதிலே வெற்றி பெற்றால் சென்னை மாநகரில் தொழுநோய் பிரச்சனைக்கு தீர்வு பெற முடியும் என்று கருதுகிறேன்.

ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சிகளுக்கான கட்டணங்கள்

*வினா எண் 254— திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெட்ரோல், டீசல் விலைகளை மத்திய அரசு உயர்த்தியுள்ளதால் ஆட்டோரிக்ஷா, டாக்சிகளுக்கு கட்டண உயர்வு கொடுக்க அரசு தீர்மானித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில் கட்டண உயர்வின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) அண்மையில் ஏற்பட்ட பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக 9-12-81 நாளிட்ட உள்துறை அரசாணை எண். (பல்வகை) 2939-ல் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) ஆட்டோ ரிக்ஷாவின் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் 0.80 காசிலிருந்து 0.90 காசாக உயர்த்தப்பட்டுள்ளது. டாக்சியில் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் ரூ. 1.50-லிருந்து ரூ. 1.70 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்ச கட்டணங்களில் மாறுதல் இல்லை.

(முற்பகல் 9.50)

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தக் கட்டணங்களை எல்லாம் உயர்த்தி நிர்ணயிக்கின்றபோது அரசு அதற்கு என்ன முறை வைத்து நிர்ணயிக்கின்றது? அல்லது குத்துமதிப்பாக நிர்ணயிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் எதையுமே குத்துமதிப்பாக நிர்ணயிப்பது இல்லை. ஏறி இருக்கின்ற பெட்ரோல், டீசல் விலையைக் கணக்கெடுத்து அதன் மூலம் கூடுதலாக எவ்வளவு செலவாகும் என்பதைப் பார்த்து அதற்கேற்பதான் உயர்த்துகிறோம். இப்போது பெட்ரோல், டீசலின் விலை 53 காசு ஏறி இருக்கின்றது. 7 பைசா கூடுதலாக செலவாகக் கூடும் என்று கணக்கிட்டு 10 பைசா உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் என்ன அளவு கோலை அரசாங்கம் வைத்திருக்கின்றது என்றுதான் கேட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெட்ரோல், டீசல் விலையினைக் கூறினார்கள். ஆனால் அரசாங்கம் அதனை நிர்ணயிப்பதற்கு என்ன முறையினை வைத்திருக்கின்றது? இப்போது ஏறிய விலைகளுக்கும் கட்டண உயர்வுக்கும் அதிக மான வித்தியாசம் இருப்பதால் ஜனங்களிடத்திலே கடுமையான ஆட்சேபணை இருக்கின்றது. ஆகவே ஜனங்களுக்கும் நியாயம் கிடைக்கின்ற முறையிலே ஆட்டோ, டாக்சி போன்றவற்றை வைத்திருக்கின்றவர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கின்ற வகையிலே அந்த வாகனங்களின் ஓட்டத்தைப் பார்த்து அதன் விவரங்களை அறிந்து நிர்ணயிக்கின்ற வகையிலே அரசினிடத்திலே ஏதாவது முறை இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு டீசல், பெட்ரோல் ஆகியவற்றின் விலை உயர்வைக் கணக்கிட்டு அந்தத் தொழிலாளர்களையும் அழைத்துப் பேசி நியாயமான முறையிலேதான் கட்டணம் நிர்ணயிக்கப்படு கின்றதே தவிர தன்னிச்சையாக நாம் எதையும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாப் மாநிலத்திலே பெட்ரோல், விலை உயர்வு காரணமாக பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநர் அமோலுநீன் அகமது அவர்களும், அந்த மாநிலத்தின் முதலமைச்சர் தர்பாரா சிங் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் கலந்து ஆலோசனை செய்து அதிகாரிகள் காரிலே செல்வதைத் தவிர்த்து குதிரையிலே செல்வதற்குத் திட்டமிட்டி

ருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதுபோன்று நம்முடைய அதிகாரிகளும் காரில் செல்வதைத் தவிர்க்க மாற்று திட்டங்கள் ஏதேனும் தமிழக அரசினிடத்திலே இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நாம் எல்லாம் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும் என்று நினைக்கிறோம். நமக்கெல்லாம் குதிரையேற்றம் தெரியாது. ஆகவே குதிரையின் மீது போக முடியாது அதைக் கற்றதற்குப் பிறகு வேண்டுமானால் அதைப்பற்றி யோசிப்பாம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: தலைவரவர்களே, தற்போது எல்லா இடங்களிலும் டாக்சிகள், ஆட்டோக்கள் போன்றவற்றிற்கு ஃப்ளாட் ரேட்டாக 5 ரூபாய் கொடுங்கள் 10 ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படி ஓட்டுகின்றவர்களுக்கும் லைசன்ஸ் கிடையாது. ஆகவே அப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அடுத்த கேள்வி இது சம்பந்தமாகத்தான் வருகின்றது. அரசாங்கம் இப்போது முறையான நடவடிக்கை எடுத்து இப்போது அந்த நிலைமை கொஞ்சம் சரி செய்யப்பட்டு இருக்கின்றது. அடுத்த கேள்வி இது சம்பந்தமாக வருவதால் அதற்கு பதில் விளக்கமாகச் சொல்லப்படும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அரபு நாடுகளிலே இருந்து தான் இப்போது பெட்ரோலைப் பெற்றுக்கொண்டு வருகின்றது. ஏனென்றால் இந்தியாவிலே பெட்ரோலியம் கிடையாது. ஆகவே அரபு நாடுகளிலே அண்மையிலே பெட்ரோல் விலையை உயர்த்தி இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே நாம் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறோம் என்றால் அதிலே இருந்தே தெரிகின்றது, அங்கே விலை உயர்ந்திருக்கின்றது என்று. ஆனால் அரபு நாடுகளிலே விலையினை உயர்த்தி இருப்பதையும் விட சற்று அதிகமாக நாம் உயர்த்தி இருக்கிறோம்.

Issue of meter certificates for Auto-Rickshaws and Taxis

*Q.No 255 –THIRU S.RAJARAMAN: Will the Hon. the Minister for Trausport be pleased to state—

a) Whether liceneed indivi uals have been allowed to issue meter certificates for Taxis and Auto-Rickshaws in Madras City; and

b) if so, the details there of?